ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

බෞද්ධ ශිෂ්ටාචාරය I
பௌத்த நாகரிகம் I
Buddhist Civilization I

45 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

※ **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
※ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
※ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
※ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் **(1), (2), (3), (4), (5)** என எண்ணிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் புள்ளடி (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** வைதிக போதனைகளின்படி அகிலமும் பிராணிகளும் எல்லாம்வல்ல பிரம்மாவினால் படைக்கப்பட்டன. அதற்காகப் பயன்படுத்திய மூல வல்லமையாவது,
(1) பூதபலம் (2) விஷ்வபலம் (3) காயபலம் (4) ஆத்மபலம் (5) தர்மபலம்

**2.** சமூகத்தின் வேறுபட்ட தன்மையையும் ஒருமைப்பாட்டையும் நடாத்திச் செல்வதற்காக மனிதவர்க்கம் நான்கு வருணப் பாகுபாட்டுடன் படைக்கப்பட்டதென வேதநூல்கள் காட்டுகின்றன. இந்தப் போதனைகளை பிராமணர்கள் பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்தினர் என்று தெரிகின்றது. பின்வரும் விடயங்களுள் அதிகார பலமொன்றைக் காப்பாற்றுவதற்கான பிரதானமான நோக்கமாவது
(1) பொருளாதாரம் (2) அரசியல் (3) சொத்துரிமை (4) கல்வி (5) பூசகர்

**3.** பிராமண வாழ்விற்குரிய கடமைகளும் செயல்களும் முறைப்படி பிராமண போதனைகளில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் பிராமண கிருஹஸ்தனுக்கும் பிராமண பூசகருக்குமிடையே ஒத்ததல்லாத (வேறுபட்ட) நிலை காட்டப்படுகின்றது. இந்த இரண்டு பிரிவினரும் அவசியம் நிறைவேற்ற வேண்டிய காரியங்களாவன,
(1) பிரமச்சரிய வாழ்க்கையை நடாத்துதல்
(2) வேதத்தைக் கற்றல்
(3) தொழிலில் ஈடுபடுதல்
(4) வியாபாரம் செய்தல்
(5) விவசாயத்தில் ஈடுபடுதல்

**4.** மனிதனுடைய பிறப்போடு அவனுக்கு நியாயமாகவுள்ள கடமைகளும் படைத்தவரினால் நியமிக்கப்பட்டுள்ளன என்பதாக வேதங்களில் கூறப்படுகின்றது. தனது உறவினர்களைக் கொல்வதற்குத் தயங்கிய அர்ஜுன மன்னனது முன்னிலையில் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றி யுத்தம் புரியும்படி தூண்டிய விதம் பகவத்கீதையில் தெளிவாகக் காணக்கிடக்கின்றது. இவ்வாறு பயனை எதிர்பாராது தமக்கு விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்ற வேண்டுமென்பது,
(1) வர்ண தர்மம் (2) ஆச்சிரம தர்மம் (3) ஸ்வ தர்மம் (4) ஆபத் தர்மம் (5) ராஜ்ய தர்மம்

**5.** புத்தர் காலத்து இந்தியாவில் வாழ்ந்த சமயத் தலைவர்களுள் முக்கியமான ஆசார்யர்கள் ஆறு பேராவர். அவர்களுள் சிலர் சமய சீர்திருத்தத்திற்கு வழிகாட்டிச் செயற்பட்டனர். சிலர் செயற்படாதிருத்தலையிட்டுப் போதித்தனர். சிலர் நாஸ்திக வாதத்தைப் போதித்தனர். சிலரது கொள்கை புலனுணர்வின் மூலம் சுகத்தையும் துன்பத்தையும் அனுபவித்தல் பற்றியதாகும். இவர்களுள் உலோகாயதவாதியாக பௌதிக சிந்தனையைப் போதித்த ஆசாரியார் யாரெனில்,
(1) பூர்ண கஸ்ஸப
(2) அஜித கேசகம்பல
(3) பகுத கச்சாயன
(4) சஞ்சய பேல்லட்டிபுத்த
(5) மக்கலீகோசல

**6.** இந்தியாவில் பரவிக் கிடந்த பிராமண கலாசாரத்திற்கு எதிராக அதிவேகத்துடனான இயக்கத்தை முன்னெடுப்பதில் முன்னோடிகளாயிருந்தவர்கள் சமணர்களாவர். அவர்களுள் அறுவர் பிரபல்யமானவர்கள். தீகநிகாயாவின் சாமஞ்ஞபல சூத்திரத்தின்படி அவர்கள் பல்வேறான கொள்கைகளையுடையவராயிருந்தனர். முக்கியமாக மரபுரீதியான பிராமண போதனைகளுக்கு எதிரானவர்களாயிருந்தனர். அத்துடன் தத்தமது கொள்கைகளிலும் ஒத்ததன்மையுண்டு என்பதையும் அவர்கள் ஏற்கவில்லை. இருப்பினும் பொதுவாக ஆறு ஆசாரியர்களும் மறுத்த கொள்கையாகப் பிரபல்யமாக அறியப்படுவது,
(1) அகிரியா வாதம்
(2) நிம்மண வாதம்
(3) உச்சேத வாதம்
(4) சாஸ்வத வாதம்
(5) புப்பெகதகேது வாதம்

[பக். 2 ஐப் பார்க்க

7. வைதீக சிந்தனையில் பெண்களுக்கு சமய, அரசியல், பொருளாதார, சமூக ரீதியிலான உரிமைகள் வழங்கப்படாதது மட்டுமல்ல அவர்கள் புத்திநுட்பமற்றவர்களாக சமூகத்தில் தாழ்ந்த தரத்தினர்களாகவும் கருதப்பட்டனர். இருப்பினும் புத்தசமயம் பெண்களுக்கு மேற்சொல்லப்பட்ட சகல உரிமைகளையும் கொடுத்து பெண்களும் ஆண்களைப் போன்று புத்திநுட்பமுடையவர்கள் என ஏற்றுக்கொண்டது. இதனை நன்கு வெளிப்படுத்தி நிற்பது பெண்களுக்குப் பின்வருமொன்று கிடைத்தமையேயாகும். அது
(1) சமய அங்கீகாரம் (2) தம்ம கேட்டல் (3) உயர் சமய அங்கீகாரம்
(4) தம்ம போதித்தல் (5) சமயரீதியில் பதவி கிட்டுதல்

8. "அகிலமும் (universe) பிராணிகளும் தெய்வப் படைப்பு" என வைதீக நூல்களில் அறிவுறுத்தப்படுகின்ற அதேவேளை புத்தசமயம் அது கிரமப்படியானதொரு பரிணாமத்தின் வெளிப்பாடு என்கிறது. இந்தக் கருத்து மக்கலீகோசலரின் பரிணாம வாதத்துடன் ஒத்ததன்று. முடிவுறாது தொடர்ந்து நிகழ்கின்ற பரிணாமத்திற்குரியதான உலகில் மனிதருக்கும் சமய ஒத்திசைவொன்றின் அவசியமென்ன" என்பதாக சக்கவத்தி ஸீகநாத, அக்கஞ்ஞ போன்ற சூத்திரங்களில் விவரிக்கப்படுகின்றது. பௌத்த பரிணாம வாத சிந்தனையின் பிரதான அம்சமாவது பரிணாமம் ஏற்படுவதற்கான காரணமாவது,
(1) காரணமின்மை (2) கடவுளின் விருப்பம் (3) பௌதிக நியதி
(4) காரணமுடைமை (5) வானிலை, காலநிலைகள்

9. கி. மு. 6ஆம் நூற்றாண்டளவில் இந்தியா பதினாறு மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என்றும் அவற்றில் ராஜாண்டு முறைமையில் நான்கும் கணதந்திர முறைமையில் இரண்டும் இருந்ததென்றும் குறிப்பிடப்படுகின்றது. பௌத்தர்களால் வணங்கி மரியாதை செலுத்தப்பட வேண்டியதும் பக்தியை வளர்க்க வேண்டுவதுமான புத்தரின் வாழ்க்கையில் முக்கியமான நான்கு நிகழ்வுகளில் இரண்டு நிகழ்வுகள் இங்கு காட்டப்படும் ஒரு இராச்சிய எல்லைக்குள்ளே நிகழ்ந்தவையாகும். அந்த இராச்சியம் எது ?
(1) மகத (2) வஜ்ஜி (3) வத்ஸ (4) மல்ல (5) கோசல

10. சக்கவத்திசீகநாத சூத்திரத்தில் காட்டப்படுவதற்கிணங்க சமூகத்தில் காரணகாரிய முறையில் பாவச் செயல்கள் தொடர்ச்சியாக நிகழ்கின்றன. அத்தகைய தாழ்வாகக் கருதத்தக்க பழக்கவழக்கங்களைக் கொண்ட நிலையை நோக்கி சமுதாயம் இயங்குவதற்கான பிரதான காரணம்
(1) இந்திரிய சந்தோஷம் (2) தீவிர ஆசை (3) வறுமை
(4) கர்வம் (5) முறையற்ற பணப்பங்கீடு

11. பௌத்த துறவு ஆரம்பமாவது ஐந்து சந்நியாசிகளை உபசம்பதாவுக்குட்படுத்தியமையினாலாகும். இவ்வாறு ஆரம்பமான துறவு உபசம்பதா செய்தல் காலப்போக்கில் தோன்றிய பிரச்சினைகளுக்கு வழங்கப்பட்ட தீர்வு என்பது மகாவக்கபாளியினால் நிரூபணமாகின்றது. அதன்படி "ஏஹி பிக்கு" பாவனையின் மூலம் நிறைவேற்றப்பட்ட துறவு உபசம்பதா முறைமைக்குப் பதிலாக "தீஹி சரணாகமன" துறவு உபசம்பதா முறைமை வழக்கத்திற்கு வந்ததற்கான காரணம்,
(1) துறவு உபசம்பதா செய்யும் முறைமை எளிமையாக்கப்பட்டதன் பிரதிபலன் ஆகும்.
(2) துறவு பலருக்கு வழங்கப்பட்டதன் பிரதிபலன் ஆகும்.
(3) புத்தரிடமிருந்த பொறுப்புகளை பிக்குக்களுக்கு பொறுப்பளித்தமையின் பிரதிபலன் ஆகும்.
(4) புத்தமதம் பரவியதன் பிரதிபலன் ஆகும்.
(5) பொதுமக்களின் கோரிக்கைக்கு ஈடுகொடுத்தமை ஆகும்.

12. கிச்சகூட என்பது பௌத்த இலக்கியங்களில் காணப்படும் ஒரு சமய முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். புத்தர் கிச்சகூட மலையில் பல சூத்திரங்களைப் போதித்துள்ளார். இந்த மலை அமைந்துள்ள இராச்சியம் எது ?
(1) வஜ்ஜி (2) கோசலம் (3) மகதம் (4) மல்ல (5) அவந்தி

13. "நிச்சயமாக நான் மற்றவர்களை வெற்றிகொள்ள வைப்பதற்கு முடியுமானவனாயுள்ளேன். நான் வென்றுள்ளேன். நான் மீண்டு கொண்டேன். மற்றவர்களை மீட்க வல்லவனாவேன். நான் அமைதியடைந்தேன். மற்றவர்களையும் அமைதியடைய வைப்பேன். நான் தேறிக்கொண்டேன். மற்றவர்களையும் தேற வைப்பேன். நிப்பானவை அடைய வைப்பேன்." புத்தரிடமிருந்த மேற்கூறிய மன எண்ணத்தை வெளிப்படுத்துவது,
(1) பெரும் கருணை (2) மனதிலுள்ள சமநிலை (3) பெரும் தலைமைத்துவம்
(4) தாமரைக்கு ஒப்பான வாழ்க்கை (5) உயரிய ஞானம்

14. "பிக்குவே வா; தம்ம நன்கு போதிக்கபட்டது. துக்கத்தைத் தவிர்ப்பதற்காக பிரமச்சரியத்தைக் கடைப்பிடி" என்ற புத்தரின் வாக்கு ஒன்றை பிராமணரான ராதா உபசம்பதா செய்யப்படுகையில் பயன்படுத்தினார். அதன் பின்னர் பயன்பாட்டுக்கு வந்த உபசம்பதா முறைமை
(1) ஓவாதபடிக்கஹன (2) தீஹி சரணாகமன (3) ஞத்திசத்ததுகம்ம
(4) பஞ்சஹறவ்யாகரண (5) அட்டவாசிக

[பக். 3 ஐப் பார்க்க

15. அக்காலத்தில் சில சாமணேருக்கன் (அனுபவமற்றோர்) பிக்குகளிடத்தில் மரியாதை காட்டாதவர்களாகவும் முறையற்ற பழக்கமுடையவர்களாகவும் பணிவற்றவர்களாகவும் நடந்து கொண்டனர். இது பற்றி அறிந்த புத்தர் ஐந்து வித துர்நடத்தையுள்ள சாமணேருக்களுக்கு தண்டனை வழங்கத் தீர்ப்பளித்தார். அவற்றுள் தண்டனைக்குரியதான முறையற்றதொரு பழக்கமாகக் குறிப்பிடப்பட்டிருப்பது,

(1) குலத்தை (குடும்பத்தை) தூற்றும் முயற்சி
(2) குற்றங்கூறலும் ஏசுதலும்
(3) மரியாதை செலுத்தாமை
(4) சங்கப் பிளவு செய்தல்
(5) தவறாகக் குற்றம் சுமத்துதல்

16. "படைவீரரை துறவிகளாக்கக் கூடாது" என்ற அதிகார ஆணை எந்த மன்னனின் வேண்டுகோளுக்கிணங்கப் பிறப்பிக்கப்பட்டது ?

(1) பிம்பிசார (2) கோசல (3) அஜாசத்த
(4) சுத்தோதன (5) உதேன

17. புத்தர், முதல் ஆறு அரஹத்தர்களுடன் ஆரம்பித்த பௌத்த மதப் பிரசாரம் காரணமாக புத்தரது காலத்திலேயே இந்தியாவின் பல பகுதிகளில் புத்தமதம் பரவியிருந்த வகையினை பௌத்த சாஸன வரலாறு தெளிவுபடுத்துகின்றது. மகாவக்கபாளி போன்ற ஆதாரங்களில் இத்தகைய மதப் பிரசார நடவடிக்கைகளை நல்ல முறையில் செயற்படுத்திய பிக்குகளதும் பிக்குணிகளதும் விபரங்களைக் காணமுடிகின்றது. இவ்வாறு புத்தர் காலத்தில் மதப் பிரசாரத்திலீடுபட்ட முக்கிய பிக்குவின் பெயராக அறியப்படுவது,

(1) பக்குல தேரர் (2) அங்குலிமால தேரர்
(3) அஸ்ஸஜி தேரர் (4) மன்தானிபுத்த புண்ண தேரர்
(5) சக்குபால தேரர்

18. புத்த சிராவக சங்க சமாஜமானது, பிக்கு சங்க, பிக்குணி சங்க, உபதொ சங்க, சேக சங்க, அசேக சங்க, சம்முதி சங்க எனும் பகுதிகளைக் கொண்டிருந்தது. இவற்றுள் "அட்டபுரிய புக்கல" என்றழைக்கப்படும் பகுதியாவது,

(1) பிக்கு சங்க (2) உபதோசங்க (3) சம்முதி சங்க (4) சேக சங்க (5) சிராவக சங்க

19. "ஞாயிற்றுக்கிழமை சமய பாடசாலை சங்கத்தில் மாணவனொருவர் நிகழ்த்திய பேச்சின் ஒரு பகுதி கீழ்வருமாறு: சமயப் பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் ஐந்து வகையான பாவங்களிலிருந்து விலக வேண்டும். புண்ணியம், பாவம், நல்லது, தீயது என்பவற்றில் பயன் வேறுபாடுகளை அறிந்த நாங்கள் புண்ணியங்கள் நல்லவை என்றுசொல்லப்பட்டவற்றை மட்டுமே செய்ய வேண்டும். பாவம், தீயவை என்று சொல்லப்பட்டவற்றைச் செய்வதற்கு வெட்கப்பட வேண்டும். வெட்கம், பயமென்பவை பௌத்தன் ஒருவரிடத்தில் அமைய வேண்டிய குணவியல்புகள் இரண்டாகும். இவற்றை ஹிரி-ஒதப் என்றும் கூறுவர். தேவதர்மம் என்றும் கூறுவர். வெட்கம், பயம் இவற்றைக் கொண்டு உருவாகும் அன்புடைமை, கருணை, கொடை, தியாகம், பணிவு போன்ற நல்ல இயல்புகள் மேலும் மேலும் வாழ்க்கையினுட் சேரும்." இப்பகுதி கூறும் முக்கிய கருத்து யாது ?

(1) சமய பாடசாலைக் கல்வியின் முக்கியத்துவம்
(2) பஞ்ச பாவங்களிலிருந்து விலகுதல்
(3) புண்ணியம், பாவம், நன்மை, தீமை பற்றிய அறிவு
(4) தேவ தர்மத்தின் முக்கியத்துவம்
(5) வெட்கம், பயம் இருப்பின் பாவம், புண்ணியம் செய்யமாட்டார்.

20. ஆசார தர்மம் (ஒழுக்க முறைமை) பற்றிய புத்தபோதனைகளின்படி சில நல்ல ஆசாரங்கள் நேரடியாக தனிப்பட்டவர் சம்பந்தப்பட்டதாகும். சில செயல்கள் நேரடியாக சமூகத்துடன் சம்பந்தப்பட்டதாகும். சில செயல்கள் தனிப்பட்டவரையும் அதுபோலவே சமூகத்தையும் சம்பந்தப்படுத்துவதாகும். இத்தகைய ஆசார தர்மம் அத்தஹித - பரஹித என்றழைக்கப்படும் நற்செயல்கள் என்று புத்தசமயம் சிறப்பிக்கின்றது. இதன்படி தன்னையும் சமூகத்தையும் காப்பாற்றுவதற்காக நேரடியாக நன்மையான சதாசார செயல்களாகக் கூறப்படத்தக்கது,

(1) பஞ்சசீலத்தைக் கடைப்பிடித்தல் (2) கொடை வழங்கல்
(3) பாலங்கள், ஏதண்டைகள் அமைத்தல் (4) உள்ளார்ந்த தியானம் செய்தல்
(5) கிணறு, குளங்கள் தோண்டுதல்

21. நல்லது - கெட்டது என்பதனைத் தீர்மானிக்கும் விடயத்தில் பிரமாணமாகக் கொள்ளக் கூடிய தர்ம உபதேசமாவது "ஆதிபதெய்" தர்மம் எனும் பெயரில் அங்குத்தர நிகாயாவில் காணப்படுகின்றது. ஆதிபத்ய என்பது அதபதியென்றோ கேந்திரம் என்றோ கொள்ளுதலாகும். அதன்படி செயலொன்றைச் செய்வதற்கு முன் அச்செயலின் பொருத்தப்பாடு பற்றி ஆராய வேண்டும். ஆதிபதெய்ய தர்மத்தின்படி நல்ல செயல் என்று சொல்வதற்கு மிகவும் பொருத்தமானது,

(1) தனக்கு ஏற்றது என்று எண்ணும் செயல்
(2) சமூகக் கருத்துக்கு ஏற்றதான செயல்
(3) தனக்கும் சமூகக் கருத்துக்கும் ஒத்துப்போகக் கூடிய செயல்
(4) தனது மனச்சாட்சிக்கும் சமூகக் கருத்துக்கும் தர்மத்துக்கும் ஏற்ற செயல்
(5) தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை தரக்கூடிய செயல்

[பக். 4 ஐப் பார்க்க

22. செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் செய்யப்படும் நல்ல - கெட்ட செயல்களின் பொறுப்பு செய்பவரைச் சாரும். அச்செயலைச் செய்ய வேண்டுமென அவருக்கு இருப்பது,
(1) தன்னிஷ்டம் (2) பொறுப்பு (3) ஆசை
(4) விருப்ப உணர்வு (5) விஸ்வாசம்

23. "புஜ்ஜ", "குஜல" ஆகிய இரண்டு பதங்களும் பௌத்த ஆசார தர்மபுலத்தில் மிக முக்கியமானவையெனக் கூறப்படத்தக்கவையாகும். பொதுவாக இந்த இரண்டு பதங்களும் நல்ல, சாதுவான, செய்ய வேண்டியவை பல நல்ல ஆசாரச் செயல்களைக் குறிப்பனவாகவும் சாதாரண கருத்தில் பயன்படுவனவாகவும் தெரிகின்றது. இருப்பினும் சமயரீதியான கணிப்பில் பார்க்கும்போது இந்த இரண்டு சொற்களுக்குமிடையில் மிக முக்கியமானதொரு வேறுபாடு இருப்பதைக் காணலாம். அதன்படி "புஜ்ஜ" அல்லது புண்ணியம் என்பது லௌகிக சந்தோஷங்களுக்கு இட்டுச் செல்வதுடன் சமசார இன்பங்களை ஏற்படுத்தும் அதேவேளை "குசல" என்பது ஆசை, கெட்ட எண்ணம், மோகம் ஆகியவற்றைக் குறைத்து அதன் மூலமாக சம்சார நிவிருத்திக்கோ அல்லது நிப்பானவுக்கு ஒருவரைச் சேர்ப்பிக்கும் ஓர் ஆசார தர்மம் என்பதாகும். அதனால் ஒருவரை நிர்வாணத்துக்கு நேரடியாக ஈடுபடுத்தும் நல்ல தர்மம் என்று கூறத்தக்கது,
(1) தினமும் பஞ்சசீலத்தின்படி ஒழுகுதல்
(2) மகாசங்கத்தினருக்குத் தானம் வழங்குதல்
(3) எல்லா உயிர்களிடத்தும் அன்புடைமை
(4) ஆத்மார்த்த பாவனை
(5) மும்மணிகளின் பண்புகளில் தியானம் செய்தல்

24. குசல், அகுசல் என்பவற்றை வகைப்படுத்தும்போது காயிக (உடல் ரீதியான) வாசிக (பேச்சு ரீதியான) மானசிக (உள ரீதியான) ஆகிய மூன்று வாயிலாகவும் ஒருவர் குசல அகுசல (நல்ல, கெட்ட) செயல்களை ஆற்ற முடியுமென்பது பௌத்த போதனையாகும். இதன்படி பத்து நற்கரும தர்மங்களில் வரும் மிசாஜதிட்டியிலிருந்து விலகிக் கொள்வது என்பது,
(1) காயிக குசலத்திலிருந்து (உடல்சார்ந்த நல்லவை)
(2) வாசசிக குசலத்திலிருந்து (வாக்குசார்ந்த நல்லவை)
(3) மானசிக குசலத்திலிருந்து (உளம் சாரந்த நல்லவை)
(4) மானசிக, காயிக குசலத்திலிருந்து
(5) காயிக அவ்வாறே வாசசிக குசலத்திலிருந்து

25. அன்றைய தினம் நான்கு பிரிவுகளைச் சேர்ந்த பக்தர்கள் நாகய தேரரின் மூன்றாம் மாத நிறைவைக் குறித்ததான நிகழ்வில் கலந்து கொள்வதற்கு விகாரைக்கு வந்திருந்தனர். பன்சில், உணவு நிவேதித்தல் போன்ற ஆரம்ப புத்த பூஜையை நிகழ்த்திய பிக்கு ஒரு சில நிமிட நேரங்கள் மைத்ரீ பாவனாவை செய்விப்பதற்குத் தவறவில்லை. பக்தர்கள் மிகச் சிறந்த மரியாதையுடன் மகாசங்கத்தினருக்கு உணவளித்தனர். தானத்தின் முடிவில் பிக்கு ஒருவர் பயனுள்ளதொரு உபதேச உரை நிகழ்த்தினார். அதனைக் கேட்ட எல்லோரது உள்ளமும் தர்மரீதியான வழியில் இணைந்து புண்ணியம் பாவம் - நல்லது, கெட்டது பற்றி விளங்கிக் கொண்டு புண்ணிய அனுபவம் பெற்றனர். அதன்பின்னர் மரபுரீதியான புண்ணிய நீர்வார்த்தல் போன்ற நிகழ்வுகள் இடம்பெற்றன. இவ்வாறு நிகழ்வு முடிவுற்றது. இந்த புண்ணியமான செயற்பாட்டு தொடர்ச்சியில் தச பிங் கிரியவத்துள் கற்பிக்கப்படும் புண்ணிய கருமங்கள் (பிங்கம) எத்தனை அடங்கியுள்ளது ?
(1) ஆறு (2) ஏழு (3) எட்டு (4) ஒன்பது (5) பத்து

26. பூந்தோட்டங்கள் வளர்த்தல் அவ்வாறே காடு வளர்த்தலும் உயரிய புண்ணியச் செயல் என்பதாக புத்தசமயம் கொள்கின்றது. அவ்வாறே நடைபாலம், பாலம் அமைத்தல், களைப்பாறும் இடங்களை அமைத்தல் அத்தகைய பெரும் புண்ணியம் என்று கருதுகின்றது. கிணறு, குளம் தோண்டுதல், குடிநீர் வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவை பிராணிகள், தாவரங்களின் நல்ல நிலைமைக்கு உதவும் என்பதால் அவையும் சிறந்த புண்ணியம் என்று சம்யுக்த நிகாயாவின் வனரோப சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. அத்துடன் இச்செயல்கள் இரவும் பகலும் எப்போதும் புண்ணியத்தை வளர்க்கும் உயரிய புண்ணியமாகும். இந்தப் பந்தியில் முக்கியமாக குறிப்பிடப்படுவது யாது ?
(1) காடு வளர்ப்பு, தோட்டம் என்பன புத்தசமயத்தில் மதிப்பளிக்கப்படுவன.
(2) நீர் முகாமைத்துவமும் பாதுகாப்பும் உயரிய புண்ணியம் என்பது
(3) மற்றவர்களுக்கு உதவும் நல்ல சமூகச் செயல்கள் நிப்பான வழிக்கு இட்டுச் செல்லும்
(4) சுற்றாடல் பாதுகாப்புக்கு புத்தமதம் மதிப்பளிக்கின்றது.
(5) இயற்கை அழகு அனுபவத்திற்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

**27.** முகாமைத்துவம் பற்றி பல வரைவிலக்கணங்கள் உள்ளன. பொதுவாக ஏதாவதொரு தாபனத்தினதோ அல்லது ஒரு தனிப்பட்டவரதோ பயன்தரக்கூடிய வகையிலான வளர்ச்சிப் படிமுறை முகாமைத்துவம் என்றாகின்றது. இங்கு கூறப்படும் கருத்தில் பௌத்த மத சந்தர்ப்பங்களிலும் முகாமைத்துவம் என்பது பயன்படுத்தப்படுவதைக் காணலாம். பௌதிக செல்வத்தையும் மானவ செல்வத்தையும் முகாமைத்துவப்படுத்துகையில் கிருஹஸ்தர், துறவிகள் ஆகிய இரு தரத்தாருக்கும் பொதுவான அடிப்படை நோக்கத்தை அடைவதில் முக்கியமான முகாமைத்துவ முறையாக சொல்லப்பட்டிருப்பது,

(1) ஆதாரங்களின் முகாமைத்துவம்
(2) ஆத்யாத்மிக முகாமைத்துவம்
(3) தனிப்பட்ட முகாமைத்துவம்
(4) உற்பத்தி முகாமைத்துவம்
(5) நேர முகாமைத்துவம்

**28.** குறிப்பிட்ட ஒருவர் எப்போதும் நித்திரையிலோ, குழுவினருடன் கூடியிருப்பதிலோ, முயற்சியில்லாத நிலையிலோ, சோம்பலிலோ, கோபிக்கும் இயல்பிலோ அமிழ்ந்திருப்பாராயின், அவர்

(1) நான்கு தீவிர எண்ணங்களுள் தீவிர வழியில் செயல்படுபவராவார்.
(2) அழிவினைப் பற்றிச் சிந்திக்காது செயல்படுபவராவார்.
(3) மற்றவர்களின் நலன்களைக் கணக்கில் கொள்ளாதவர்.
(4) விலக்கப்பட்ட தர்மங்கள் பற்றிய அறிவில்லாதவராகச் செயலாற்றுபவர்.
(5) புண்ணியம், பாவம் பற்றிய அறிவின்மையுடன் செயல்படுபவர்.

**29.** அழகியல் இரசனைக்கு உதவும் பல்வேறு ஊடகங்கள் காணப்படுகின்றன. அவை இயற்கைச் சூழல், கலையம்சம் பொருந்திய படைப்புகள், தனிப்பட்ட அழகியல் மையம் என்றவாறு அழைக்கப்பட முடியும். பௌத்த கலைப்படைப்பாளிகள் ஆக்கபூர்வமான அழகியல் விடயங்களில் நல்ல ஒழுங்குடையவர்களாகவும் அழகியல் பற்றிய பௌத்த கொள்கையை மீறாதவர்களாகவும் தம்து படைப்புகளைப் படைத்தனர். புத்த சமயத்திற்கமைவான ஆக்கபூர்வமான அழகியல் உதவ வேண்டியது,

(1) பற்றின்மை மற்றும் உள்ளார்ந்த சந்தோஷம்
(2) சிரத்தை மற்றும் பக்தி
(3) இரசனை மற்றும் பொழுதுபோக்கு மகிழ்வு
(4) இன்ப மற்றும் மகிழ்வு
(5) சுக மற்றும் மன ஒருமைப்பாடு

**30.** ஆட்சியாளர் ஒருவர் அறவழியிலான ஆட்சியை நடத்துவதற்கு பத்து குணவியல்புகளைப் பயன்படுத்த வேண்டுமென ஜாதகபாளியில் கூறப்பட்டுள்ளது. அவை 'தசராஜ்யதர்ம' (பத்து அரச தர்மங்கள்) என்று கூறப்படுவன. பத்து அரச தர்மங்களுள் அடங்கும் முதல் மூன்று அம்சங்களாவன,

(1) தானம், சீலம், பாவனா
(2) தானம், சீலம், நெக்கம்ம
(3) தானம், சீலம், பரிச்சாக
(4) தானம், சீலம், பஞ்ஞா
(5) தானம், சீலம், சமாதி

**31.** சிறந்த உபதேசகரான புத்தர் தனது சிஷ்யர்களதும் சிஷ்யைகளதும் தகைமையை மதித்து பதவிகளை வழங்கினார் என்பது அங்குத்தர நிகாயாவின் எததக்கபாளியினால் தெரிய வருகின்றது. அதன்படி துதங்கதாரிகளுள் முதலாவது உயர்ந்த பதவியைப் பெற்றுக்கொண்டவர்,

(1) வண. மகா கச்சாயன
(2) வண. காஷ்யப
(3) வண. லக்குண்டக
(4) வண. அஞ்ஞா கொண்டக்ஞ்ஞா
(5) வண. சரிபுத்த

**32.** புத்தர் பரிநிர்வாணமடைந்து நூறு வருடங்களின் பின்னர் விசாலா தலைநகரில் இருந்த வாலுகாராமாவில் கூடிய சம்பகாமீ அரகத்தரைத் தலைமையாகக் கொண்ட எழுநூறு பேர் கொண்ட குழுவினருடன் இரண்டாவது புத்த மகாசபை கூடுவதற்கு முன்னர் விசேட செயற்குழு (உப்பாஹிகா) ஒன்று தசவஸ்து விநய விதியுடன் ஒத்திருக்கவில்லை எனத் தீர்மானித்ததென்றும் சுல்லவக்க பாளியின் சத்தசதிககந்தகவில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த செயற்குழுவில் அங்கம் வகித்த பிக்குகளின் எண்ணிக்கையாவது,

(1) பன்னிரண்டு
(2) இருபது
(3) எட்டு
(4) ஐந்நூறு
(5) எழுநூறு

**33.** பலலுப் நகர அசோகபுரத்தில் மொக்கலீபுத்த திஸ்ஸ மகாதேரரைத் தலைமையாகக் கொண்ட ஆயிரம் அரகத்தல் பங்கேற்றவகையில் அசோக மன்னனின் ஆதரவுடன் மூன்றாவது புத்த மகாசபை நிகழ்ந்ததென்று மூலாதாரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த மகாசபையில் தம்ம, விநய என்பவற்றை எதிர்காலத்தில் காப்பது குறித்து எடுக்கப்பட்ட முக்கிய முயற்சியாகக் கொள்ளத்தக்கது,

(1) சகல புத்த போதனைகளையும் ஒன்றாக்கி பிக்கு பரம்பரைகள் மூலமாக அவற்றை (மனப்பாடம் செய்து) நிலைபெறச் செய்வது தொடர்பான ஒழுங்குமுறைகளை உண்டாக்கியமை
(2) பிக்கு வேஷத்திலிருந்த அறுபதாயிரம் சமய பேதமுடையவர்களை விலக்கியமை
(3) அயலிலுள்ள தேசங்களுக்கு புத்தசமயத்தை அறிமுகப்படுத்தியமை
(4) கற்பலகைகளில் தம்ம ஐப் பொறித்துக் காட்சிப்படுத்துதல்
(5) நீண்ட காலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விநயச் செயல்களை மீண்டும் ஆரம்பித்தல்

[பக். 6 ஐப் பார்க்க

The National e-learning Portal for The General Education

**34.** சுபத்ர தேரரின் சாசனத்திற்கு விரோதமான கூற்று முதலாவது புத்த மகாசபை கூட்டப்படுவதற்கு உடனடிக் காரணமாகக் கணிக்கப்பட்டாலும் அதற்கான பல காரணங்களும் இருந்தன என்பது சாசன வரலாற்றின் மூலம் தெளிவாகின்றது. நிகண்டநாதபுத்தரின் மறைவுடன் அவரது சிஷ்யர்களிடையே அபிப்பிராய பேதங்கள் உண்டாகி ஜைன சாசனம் இரண்டானமையும் புத்த மகாசபையொன்றின் அவசியத்தை ஏற்படுத்தியதொரு நிகழ்வு என்று தீகநிகாயாவின் சங்கீதி சூத்திரம் குறிப்பிடுகின்றது. அந்த சூத்திரத்தின்படி, இந்நிகழ்வினை கவனத்திற்கெடுத்து உலக நன்மைக்காக புத்தரின் போதனைகளை ஓதுவது நல்லது என்று கூறியவர்,

(1) வண. ஆனந்த தேரர் (2) வண. மகா காஷ்ப தேரர் (3) வண. சுந்த தேரர்
(4) வண. சாரீபுத்த தேரர் (5) வண. உபாலி தேரர்

**35.** புகழ்பெற்ற பௌத்த பல்கலைக்கழகமான நாலந்தா பல்கலைக்கழகத்திலிருந்து நாகார்ஜுனபாத, ஆர்யதேவ, ஹியுங்ஸாங், சீலபத்ர, சாந்த ரக்ஷித போன்ற பிரசித்தமான பௌத்த அறிஞர்கள் கற்பித்தல் தொழிலுக்கு மேலதிகமாக மதப் பிரசாரச் செயல்களிலும் ஈடுபட்டிருந்தனர். அதன்படி திபெத்திற்கு மதப் பிரசாரத்துக்காக பணியாற்றச் சென்ற பிக்கு ஆசாரியார்,

(1) நாகார்ஜுன (2) ஆர்யதேவ (3) சீலபத்ர
(4) ஹியுங்ஸாங் (5) சாந்த ரக்ஷித தேரர்

**36.** பௌத்தத்துக்கு முந்திய இலங்கையில் பல்வேறு சமய வழக்கங்கள் நிலவின என மகாவம்சம் முதலான வரலாற்றாதாரங்களில் குறிப்பிடப்படுவதுடன் சில தொல்பொருள் ஆராய்ச்சி ஆதாரங்களும் அதற்கு சாட்சியாகின்றன. இந்த சமய நம்பிக்கைகளுள் பண்டுகாபய மன்னன் காலத்தில் யக்கன, யக்கினி நம்பிக்கைப் பழக்கவழக்கங்கள் மக்களிடையே பிரபல்யம் பெற்றிருந்த விதம் அரசனால் ஆங்காங்கு யக்கன், யக்கினிக்குத் தேவாலயங்கள் கட்டுவிக்கப்பட்டுக் கொடுக்கப்பட்டமையின் மூலம் தெளிவாகின்றது. இதன்படி அபயவாவியின் கீழ்க்கரையில் தேவாலயம் ஒன்று கட்டப்பட்டு பூஜை செய்விக்கப்பட்டது,

(1) வலவாமுகி யக்கினிக்கு (2) காலவேல யக்கனுக்கு (3) சித்தராஜ யக்கனுக்கு
(4) வைசிரவண யக்கனுக்கு (5) மஹேஜ யக்கனுக்கு

**37.** தேவநம்பியதிஸ்ஸ மன்னாகியதும் சம காலத்தில் இந்தியாவில் ஏகாதிபத்தியவாதியாயிருந்த அசோக மன்னனிடத்துக்கு பரிசுப்பொருள்களுடன் அரித்த இளவரசனையும் தூதுக்குழுவினரையும் அனுப்பி வைத்தான் என்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அரித்த இளவரசனின் சந்திப்பினால் பெரும் மகிழ்ச்சியடைந்த அசோக மன்னன் ராச்சிய அபிஷேகத்துக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் திஸ்ஸ மன்னனுக்கு அனுப்பி வைக்கவும் அத்துடன் இராஜமரியாதையுடன் விசேட செய்தியொன்றை அனுப்பி வைக்கவும் அசோக மன்னன் மறந்து விடவில்லை. அந்த விசேடமான செய்தியாவது,

(1) மிக விரைவில் தன் மகனான மிகிந்து தேரர் சமயச் செய்தியை எடுத்துக்கொண்டு இலங்கைக்கு வருவான் என்பது.
(2) தனது மகள் சங்கமித்தவிடம் ஸ்ரீ மகாபோதி கிளையை இலங்கைக்கு அனுப்புவார் என்பது
(3) தான் மும்மணிகளிடம் சரணடைந்திருப்பதால் திஸ்ஸ மன்னனையும் சரணடைந்து உபாசகராகுமாறு அறிவித்தமை
(4) தன்னால் அனுப்பப்பட்ட இராஜமரியாதைப் பொருளை அணியாது பட்டாபிஷேகம் செய்ய வேண்டாம் என்பது
(5) மிகிந்து வரும்வரை இலங்கையில் புத்தசமயத்தைப் பரப்புவதற்கு வேண்டிய அடிப்படைச் செயற்பாடுகளை ஆயத்தம் செய்து வைக்கும்படி அறிவித்தமை

**38.** புத்தர் மூன்றாவது முறையாக இலங்கைக்கு வந்து ஆத்மீகத்தில் ஈடுபட்டிருந்த இடத்தில் மிகிந்து தேரரின் அறிவுறுத்தலின்படி தேவநம்பியதீசனால் தூபரமை தாதுகோபம் கட்டப்பட்டதென மகாவம்சம் முதலான மூலாதாரங்கள் குறிப்பிடுகின்றன. அந்த மூலாதாரங்களின்படி இந்த ஸ்தூபத்தில் வைக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படுவது புத்தரின்,

(1) பிச்சைப் பாத்திரம் (2) கழுத்து (3) வலது தாடை
(4) நெற்றி (5) வலது பல்

**39.** மகாவிகாரை இலங்கையின் முதலாவது தேரவாத பௌத்த மத்திய ஸ்தானமாகும். வரலாற்றுத் தகவல்களின்படி அங்கு பலவிதமான புலங்கள் தொடர்பான நடவடிக்கைகள் நடைபெறுகின்றன. அதன்படி தேரவாத பௌத்தத்தை நிலைபெறச் செய்வதற்காக மகாவிகாரை ஆற்றிவரும் பணிகளுள் முக்கியமானதாகக் கொள்ளத்தக்கது,

(1) வைதுல்ய வாதத்தை புறந்தள்ளுகை (2) அபயகிரி பிக்குகளின் கருத்துகள் ஏற்காதிருத்தல்
(3) திரிபிடகத்தை நூல் வடிவாக்கல் (4) பாஷ்யங்களைத் தொகுத்தல்
(5) விநய சபையை நடாத்துதல்

**40.** 1871 இல் பர்மாவின் மண்டல நகரில் இரண்டாயிரத்து இருநூறு பிக்குகள் பங்குபற்றிய நிலையில் நிகழ்ந்த புத்த மகாசபை ஐந்தாவது தேரவாத மகாசபையெனக் கொள்ளப்படுகின்றது. இதன் பின்னர் திரிபிடகம் 726 வெண்கல தகடுகளில் எழுதுவித்து பாதுகாக்கப்பட்டது. இதற்கு ஆதரவு அளித்த மன்னன்,

(1) மின்டோன் மின் (2) கேயங்சித்த (3) அனவரத
(4) தம்மசேதிய (5) போதபயா

**41.** கி. பி. 7ஆம் நூற்றாண்டில் த்வாரவதீ இராச்சியத்தில் புத்தசமயம் செழிப்பாக இருந்தது என ஹியுங்சியாங்கின் அறிக்கையில் சொல்லப்படுகின்றது. இக்கூற்றின்படி இந்த யுகத்தில் புத்தசமயம் செழிப்பாக நிலவியது,

(1) பர்மாவில் (2) தாய்லாந்தில் (3) இந்தியாவில்
(4) ஆப்கானிஸ்தானில் (5) சீனாவில்

[பக். 7 ஐப் பார்க்க

42. பௌத்த சமய நூற்தொகுப்பின்போது விசேடமான செயற்பாடுகளை நிறைவேற்றிய நாடாக சீனா சொல்லப்படத்தக்கதாகும். இந்தியா, மத்திய ஆசிய கற்ற பிக்குகளும் அவ்வாறே சீன பிக்குகளும் விநய நூல்களை பிரதிசெய்து சீனாவுக்கு கொண்டு சென்று அவற்றை அங்கு சீன மொழிக்கு மொழிபெயர்த்து கற்பித்தல், ஆராய்தல், பாதுகாத்தல் போன்ற செயற்பாட்டு பாவனைக்குட்படுத்தினர். இந்த சமய நூல்கள் பெருமளவுக்கு சீன மொழியில் மொழிபெயர்த்த முன்னோடியான படித்த புத்த பிக்கு யார் ?
(1) காஷ்யப மாதங்க தேர (2) தர்மரக்ஷ தேர (3) போதிதர்ம தேர
(4) நாகார்ஜுன தேர (5) குமார் ஜீவ தேர

43. யப்பானிய மக்கள் சிலைகளை நிர்மாணிப்பதில் வல்லவர்கள். புத்தமதம் அறிமுகமான பின்னர் மகாயான பௌத்தத்தின் அப்படையை சீனாவிலிருந்து பெற்ற யப்பானியர் தமது நாட்டு பழக்கவழக்கம், வாழ்க்கை முறை, காலநிலை என்பவற்றிற்கேற்றவாறு மாற்றியமைத்துக் கொண்டனர். அதன்படி யப்பானியரிடையே பல்வேறு சமய, தத்துவ அங்கீகாரத்துடன் பௌத்த நிகாய வளர்ச்சியேற்பட்டது. நிச்செரென் தேரரால் அறிமுகப்படுத்தப்பட்ட நிச்சேரன் நிகாயாவும் அத்தகையதொரு நிகாயவாகும். அத்துடன் “நமோ மியோ ஹோரென்கே க்யோ” என்று பாடிக்கொண்டு மகாயான சூத்திரத்தினை வணங்குதல் அதில் முக்கிய சமய நிகழ்வாகும். இவ்வாறு வணக்கத்திற்குரியதான மகாயான சூத்திரமாவது,
(1) அஷ்டஸாஹஷ்ரிகா பாரமிதா (2) சுகாவதீ வியூக (3) லங்காவதார
(4) சத்தர்மபுண்டரீக (5) விமலகீர்த்தி நிர்தேஷ

44. ஜப்பானில் மகாயான புத்தசமய எண்ண உருவாக்கமாகக் கொள்வதற்கு உதவும் “நெம்புத்ஸு” எனும் பெயருடைய அமிதாப வணக்கத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் யப்பானிய புத்தசமயத்தை புதிய வழியில் செலுத்துவதற்கு முன்னோடியாக இருந்தவர்
(1) ஷொதோகு தயிஷீ (2) ஷின்றன் (3) ஹோனென்
(4) ஸயிசோ (5) குகயி

45. புத்தர் முதன்முதலாக மனித உருவில் அமைக்கப்பட்டது கி. மு. 1ஆவது நூற்றாண்டிலோ அல்லது கி. பி. 1ஆவது நூற்றாண்டிலாகுமென ஏற்கின்றனர். இருப்பினும் இதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இலங்கையில் புத்தர்சிலையொன்று நிர்மாணிக்கப்பட்டதென்று மகாவம்சம் குறிப்பிடுகின்றது. அந்தச் சிலை என்ன சிலை எனக் கருதப்படுகின்றது ?
(1) சமாதி (2) தொலுவில (3) உருசிலா (4) அவுகன (5) மகாஇலுக்பல்லம

46. சந்திரவட்டக்கல் கலைஞர்களின் கலை நிபுணத்துவத்தை வெளிப்படுத்தும் ஒரு படைப்பாகும். அதிலடங்கியுள்ள கலை அம்சங்கள் வெறும் அழகுச் சிறப்புகளை மட்டுமன்றி முக்கியமான கருத்துகளையும் கொண்டுள்ளதென ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். அதற்கமைவாக எச். சீ. பீ. பெல்கின் கூற்றுப்படி சந்திரவட்டக்கல்லின் மூலம் சுட்டப்படுவது,
(1) நான்கு திசைகள் (2) பவ (பிறப்பு, இறப்பு) சக்கரம்
(3) நாற்திசைக்குரிய பிக்குகள் (4) மங்கலத்துக்கான முக்கிய பொருள்கள்
(5) சூரியனும் சந்திரனும்

47. இலங்கை ஸ்தூப அமைப்பில் இந்திய ஸ்தூபங்களின் செல்வாக்கு இருந்தபோதிலும் பிற்காலத்தைய பேசாவலலு, கொத்கருல்ல, கொத்த என்பது முதலானவை புதிய அம்சங்களையும் ஸ்தூப அமைப்பில் சேர்த்துக்கொண்டன. அதன்படி இந்திய தாதுகோபங்களில் காணப்படாதவை, இலங்கையிலுள்ள தாதுகோபங்களில் மட்டும் காணக் கிடக்கின்றன. நாற்திசைகளையும் நோக்கியதாக அமைக்கப்பட்ட புதிய அம்சமாவது,
(1) சந்திரவட்டக்கல் (2) காவல் கல் (3) தூண்கள்
(4) வாகல்கட (5) படிகள்

48. பௌத்த பூசைக்குரிய பொருளைப் பாதுகாத்தலுக்காக படிமாகர, போதிகர, தூபகர என்றிவ்வாறாக அழைக்கப்படும் கட்டடங்கள் விஷேஷமாகக் கட்டப்பட்டன. அதற்கிணங்க அட்டதாகே என்றழைக்கப்படும் அமைப்பு எதனைப் பாதுகாப்பதற்காக அமைக்கப்பட்டது ?
(1) புத்தசிலை (2) அரச மரம் (3) தலதா (பல்)
(4) ஸ்தூபம் (5) புத்த நூல்கள்

49. சிங்கள இலக்கியத்துக்கு புத்த சமயத்தின் மூலம் கிடைத்த போஷணை எத்தகையதாயின் பழைய சிங்கள இலக்கியத்தில் பௌத்த கருப்பொருள் இல்லாது ஆக்கம் பெற்ற ஆக்கமொன்றினை காணமுடியாது என்பதனால் விளங்கும். புத்த குணங்களையும் பல்வேறு பௌத்த கருப்பொருளையும் மூலமாகக் கொண்டு ஆக்கப்பெற்ற பெருமளவு சிங்கள இலக்கியப் படைப்புகளுள் வித்யா சக்ரவர்த்தினியின் புத்சரண நூலின் கருப்பொருளாய் இருப்பது, புத்தரின்
(1) சுகத குணம் (2) சத்தா குணம் (3) புரிச தம்மசாரதீகுணம்
(4) ஸம்மா ஸம்புத்த குணம் (5) லோகவிது குணம்

50. திம்புலாகல விகாரை அல்லது உதும்பரகிரி விகாரை தியானத்துக்குரிய இடம் மட்டுமன்றி சமயம் சார் இடமாகவும் முக்கியத்துவம் பெறுவதுடன் புத்த கலையைப் பேணும் இடமாகவும் உள்ளது. அதனால் அவ்விகாரை பிரபல்யமாயிருப்பது எதற்கெனில்,
(1) பௌத்த ஓவியம் (2) பௌத்த சிலை (3) பௌத்த சிற்பம்
(4) பௌத்த செதுக்கல் (5) பௌத்த ஸ்தூபம்

* * *

AL/2014/45/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2014 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2014 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2014

බෞද්ධ ශිෂ්ටාචාරය II
பௌத்த நாகரிகம் II
Buddhist Civilization II

45 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இல் **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இல் **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I

(இப்பகுதியில் **இரண்டு** வினாக்களைத் தெரிவுசெய்து விடையளிக்கு.)

1. (i) புத்தரின் எல்லாம் அறியும் அறிவு பற்றி சுருக்கமானதொரு அறிமுகம் தருக.
   (ii) புத்தரின் மகாஞானம் வெளிப்படுத்தப்படும் **இரண்டு** சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டுக.
   (iii) புத்தரின் முதன்மையான தலைமைத்துவத்தை விளக்கி நிற்கும் சந்தர்ப்பங்கள் **இரண்டினை** எடுத்துக்காட்டுக.
   (iv) புத்தர் '**திலோகுரு**' என்றழைக்கப்பட்டது ஏன் என்பதைச் சுருக்கமாக விவரிக்குக.
   (v) உவமைகளைப் பயன்படுத்தி மதத்தைப் போதிக்கும் புத்தரின் தகைமைச் சிறப்பினை **இரண்டு** உதாரணங்கள் மூலம் விளக்குக.

2. (i) புத்தர் காலத்து இந்தியாவில் நிலவிய பல்வேறு சிரமண பிரிவுகள் பற்றிச் சுருக்கமானதொரு அறிமுகம் தருக.
   (ii) பிராமண பூசக வகுப்பினருக்கு உரியதான விசேட குணவியல்புகள் பற்றி விளக்குக.
   (iii) பௌத்த துறவுச் சமூகத்தின் தோற்றம் பற்றி அறிமுகம் செய்க.
   (iv) சாமணேற சமய அங்கீகாரத்துக்கும் உபசம்பதாவுக்குமிடையிலான வேறுபாட்டைத் தெளிவுபடுத்துக.
   (v) 'ஞத்தி சதுத்த கம்ம' உபஸம்பதா பற்றிச் சுருக்கமான அறிமுகம் செய்க.

3. (i) உத்தான ஸம்பதா என்பதை சமயரீதியாக வர்ணிக்குக.
   (ii) 'போக சுக்க' என்பதால் கருதப்படுவது யாது என அறிமுகஞ் செய்க.
   (iii) 'போக விநாஷ முக' என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக எடுத்துக்காட்டுக.
   (iv) மாற்றுருவில் நண்பர்கள், உண்மை நண்பர்கள் என்பதைச் சுருக்கமாக அறிமுகப்படுத்துக.
   (v) பெற்றோர், பிள்ளைகளின் கடமைகள், பொறுப்புகளை சிகாலோவாத சூத்திரத்திற்கமைவாக எடுத்துக்காட்டுக.

## பகுதி II

(இப்பகுதியில் **மூன்று** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.)

4. (i) புத்தர் காலத்தில் இந்தியாவில் அரசியலமைப்பு அமைக்கப்பட்டிருந்த விதத்தினை வரலாற்றுப் பதிவுகளின் அடிப்படையில் பரிசீலிக்குக.
   (ii) கி. மு. 6ஆம் நூற்றாண்டளவில் பாரத சமூகம் வாணிபமயப்படுத்தப்பட்டிருந்ததா என்பதை பௌத்த ஆதாரங்களின் அனுசரணையுடன் விளக்குக.
   (iii) பகுடகச்சாயனரின் போதனைகளை எடுத்துக்காட்டி, பௌத்த போதனைகளின் அடிப்படையில் அவற்றை விமர்சனரீதியில் எடுத்துக்காட்டுக.
   (iv) பெண்களின் கௌரவத்தைக் பாதுகாப்பதில் புத்தசமயத்தின் பங்களிப்பை மதிப்பிடுக.

5. (i) பௌத்த அரசியலமைப்புத் தத்துவங்கள் சமூக நலனை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ள விதத்தைப் பரிசீலிக்குக.
   (ii) "நல்லொழுக்கத்தையுடைய சமூகமொன்றை அமைப்பதற்குச் சட்டத்தையும் ஒருவரின் சமய ஒழுக்க முறைகளையும் மதித்தல் ஒரே அளவு அவசியமானவை" என்பதனை பௌத்த போதனைகளுக்கமைவாக விளக்குக.
   (iii) நல்லது, கெட்டதை தீர்மானிக்கும் பௌத்த நிபந்தனை சர்வகாலத்துக்கு முக்கியத்துவமாயிருக்கும் விதத்தைச் சுட்டிக்காட்டுக.
   (iv) போட்டி காரணமாக ஏற்படும் உளப் பிரச்சினைகளைத் தோற்கடிப்பதற்கு பௌத்த போதனைகளின் முக்கியத்துவத்தை மதிப்பிடுக.

[பக். 2 ஐப் பார்க்க

**6.** (i) வளங்களை முகாமைப்படுத்துவது பற்றிய பௌத்த போதனைகள் நவீன பொருளாதாரப் பிரச்சினைகளை இழிவளவாககுவதற்கு எவ்வாறு பயன்படுத்தக்கூடியதாயுள்ளதென்பதைப் பரிசீலிக்குக.

(ii) அழகியல் நுகர்வு பற்றிய பௌத்த போதனைக்கமைவாக அழகியலை அனுபவிப்பதென்பது ஒருவருக்குரிய பெரியதொரு உயர் பண்பாகும் என்பதை விளக்குக.

(iii) ஆதிகாலத்திலிருந்தே இலங்கை மக்கள் சமூகத்திற்கு நல்லொழுக்க முறையிலான சந்தோஷ அனுபவத்தை வழங்கும் பௌத்த கலாசார அம்சங்கள் பற்றி பரிசீலிக்குக.

(iv) செல்வத்தைப் பயன்படுத்துவது பற்றிய பௌத்த போதனைகள் சமூக ஒத்திசைவுக்கு உதவும் வகையினைச் சுட்டிக்காட்டுக.

**7.** (i) இரண்டாவது பௌத்த மகாசபை பௌத்த வரலாற்றில் முக்கிய கட்டமாகக் கருதப்படுவது எதனால் என்பதை பரிசீலிக்குக.

(ii) மகிந்தன் வருகை வரலாற்று நிகழ்ச்சியாகக் கொள்ளப்படுவதற்கான காரணங்களையும் உண்மைகளையும் போதுமான அளவுக்கு எடுத்துரைக்க.

(iii) அபயகிரி சம்பிராயத் தோற்றம் இலங்கையின் சமய, அரசியல் வரலாற்றில் குழப்பத்தை ஏற்படுத்திய வகையினை வரலாற்றாதார. அடிப்படையில் பரிசீலிக்குக.

(iv) சீனாவுக்கு புத்தசமயத்தை அறிமுகப்படுத்துதல் தொடர்பான வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக எடுத்துக்கூறி, சீன நாடுகளில் புத்தசமயத்தைப் போஷிப்பதற்குச் சென்ற இந்துசீன பிக்குகள் ஆற்றிய பணிகளை மதிப்பிடுக.

**8.** (i) மதுரா புத்தசிலை கலைத்தோற்றத்தில் செல்வாக்குச் செலுத்திய பின்புலத்தைச் சுருக்கமாக விளக்கி, மதுரா புத்தசிலைகளின் சிறப்பியல்புகளைத் தெரியப்படுத்துக.

(ii) "படிமா-கர"விலும் அதனுடன் தொடர்புடைய கலைப்படைப்புகளிலும் இலங்கையின் அடையாளம் வெளிப்படுகின்றதா என்பதனைப் பரிசீலிக்குக.

(iii) பௌத்த விழுமியங்களை மக்களின் உள்ளத்தில் பதியவைப்பதில் பௌத்த நாடகக்கலை ஊடகம் எவ்வளவு தூரத்திற்கு வெற்றிகொண்டது என்பதை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.

(iv) மக்கள் கவி சம்பிரதாயத்தினைப் போஷிக்கும் விடயத்தில் புத்த சமயத்தின் மூலம் கிடைத்த உணர்வுப் பாதிப்பினை உதாரணங்கள் மூலம் விளக்குக.

* * *

The National e-learning Portal for The General Education